ssss

**(அரச/ பகுதியளவு அரச உத்தியோகத்தர்கள்/ வெளியார்ளுக்கு)**

**முடிவுத் திகதி - 06.02.2026**

# போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கீழே குறிப்பிடப்படும் திட்ட ங்களின்**திட்ட உள்ளக கணக்காய்வாளர்** பதவிக்கு அரச / பகுதியளவு அரச உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த நியமனங்கள் நிதி அமைச்சினால் 2019.03.05 ஆந் திகதி வெளியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்கும்

| **திட்டத்தின் பெயர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **திட்ட பெறுமதி ( ஐ,அ.டொ. மில்)** | **பதவி** |
|---|---|---|---|
| பதுளை செங்கலடி வீதி மேம்பாட்டுத் திட்டம் | 01 | ஐ,அ.டொ. ( 15 - 50) மில். வகுதி | திட்ட உள்ளக கணக்காய்வாளர் |
| நானாவித வெளிநாட்டு உதவித் திட்டம் (MFAP) | 01 | ஐ,அ.டொ. (50 - 100) மில். வகுதி | |
| உள்ளடக்கிய இணைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் (ICDP) | 01 | ஐ,அ.டொ. (100 - 250) மில். வகுதி | |

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை, இணைப்பு 01 இன் பிரகாரம் , உள்ளக கணக்காய்வாளர் (PS 04) வகுதி அடிப்படைத் தகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன**

| அடிப்படை கல்வித் தகுதிகள் | திட்ட பெறுமதியின் படி பதவித் தகுதி அனுபவம் | | |
|---|---|---|---|
| **(1) அல்லது (2) கீழ்** | **ஐ,அ.டொ. ( 15 - 50) மில். வகுதி** | **ஐ,அ.டொ. ( 50 - 100) மில். வகுதி** | **ஐ,அ.டொ. (100 - 250) மில். வகுதி** |
| **01)**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்திருத்தல்.<br>அல்லது<br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.<br>அல்லது<br>சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு இணை உறுப்புரிமை / அதனையொத்த தொழிற் தகைமை | அத்துடன்<br>சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் 06 ஆண்டுகள் தகுதி பெற்ற பின்னரான அனுபவம். | அத்துடன்<br>சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் 07ஆண்டுகள் தகுதி பெற்ற பின்னரான அனுபவம் . | அத்துடன்<br>சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் 08 ஆண்டுகள் தகுதி பெற்ற பின்னரான அனுபவம் . |
| **02.** அரசுத் துறையின் அகில இலங்கை சேவைகள் வகுப்பு III/II அல்லது அதற்கு மேற்பட்ட அல்லது தொடர்புடைய துறையில் ஒத்த தரத்தையுடையஉத்தியோகத்தர். | அத்துடன்<br>வகுப்பு III/II பதவியில் குறைந்தபட்சம் 06 ஆண்டுகள் அனுபவம். | அத்துடன்<br>வகுப்பு III/II பதவியில் குறைந்தபட்சம் 07ஆண்டுகள் அனுபவம். | அத்துடன்<br>வகுப்பு III/II பதவியில் குறைந்தபட்சம் 08 ஆண்டுகள் அனுபவம். |

குறிப்பு -

**தொடர்புடைய துறை என்பது "கணக்காய்வுத் துறை" என்பதைக் குறிக்கிறது, மேலும் தொடர்புடைய துறையில் அனுபவமும் இருக்க வேண்டும்**

<u>பொதுவான நிபந்தனைகள்:</u>

- ஆட்சேர்ப்பு, சம்பளம், நன்மைகள் மற்றும் பிற சேவை நிபந்தனைகள் நிதி அமைச்சினால் 2019.03.05 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படியாகும்.

- தெரிவுகள் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மற்றும் ஏனைய சுற்றறிக்கை நிபந்தனைகளின் அடிப்படையில் இருக்கும்.
- அனைத்து விண்ணப்பங்களும் இந்த சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்பின்படி நிரப்பப்பட வேண்டும் என்பதோடு, தொடர்புடைய ஆவணங்களின் அனைத்து பிரதிகளும் அனுப்பப்பட வேண்டும்.
- ஒன்றுக்குமேற்பட்டபதவிகளுக்குவிண்ணப்பித்தால், ஒவ்வொருபதவிக்கும்தனித்தனிவிண்ணப்பம்சமர்ப்பிக்கப்படவேண்டும்.

**01. வயது வரம்பு:**

- அரச, பகுதியளவு அரச உத்தியோகத்தர்களுக்கு 60 வயதிற்கு கீழ்
- ஏனையவர்களுக்கு 64 வயதிற்கு கீழ்

**02. சம்பளம்:**

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும்.

**03. வேலைவாய்ப்பு விதிமுறைகள்:**

- இந்த நியமனம் ஒப்பந்த அடிப்படையிலானது , ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கானது. சேவைத் தேவைப்பாடுகள் மற்றும் செயலாற்றுகை அடிப்படையில் சேவை நீடிப்பு கருத்திற்கொள்ளப்படலாம்.

- விண்ணப்பதாரர் ஏற்கனவே அரச , பகுதியளவு அரச நிறுவனங்களில் ஒரு நிரந்தரப் பதவியை வகித்தால், 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் பத்தி 2.3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள , நிலையான பதவியின் நியமன அதிகாரியால் பரிந்துரைக்கப்பட்ட மற்றும் பரிசீலிக்கப்படும் சரியான விடுவிப்பு அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

- விண்ணப்பத்தை முறையாகப் பூர்த்தி செய்யாத மற்றும் விண்ணப்பத்துடன் சரியான தகவல்களை சமர்ப்பிக்காத வேட்பாளர்கள், மற்றும் 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் பிற தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் நியமனங்களுக்காக கருத்திற்கொள்ளப்பட மாட்டார்கள்.

- நியமனங்களை வழங்குதல் அல்லது வழங்காதிருத்தல் மற்றும் சேவை நீடிப்புகள் குறித்த முடிவு சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய ஏற்பாடுளின்படி அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின் படியானதாகும்.

**04. நிறுவனத் தலைவரின் பரிந்துரை**

அரச/பகுதியளவு அரச நிறுவனங்களில் ஏற்கனவே நிரந்தரப் பதவியை வகிக்கும் விண்ணப்பதாரர், அவர்களின் நிறுவனத் தலைவர் மூலமாகவும் , 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பத்தி 2.3.3 இன் படி , நிலையான பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதற்கான அங்கீகாரத்துடனும் , விடுவிப்பு அடிப்படையில் பரிந்துரையுடனும்

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் . ( இல்லாதபட்சத்தில், அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.)

**05. விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்**

கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் , கல்வித் தகுதிகள், அடிப்படை பட்டத்தின் பிரதி , பணி அனுபவம் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்களுடன், கடித உறையின் மேல் இடது மூலையில் விளம்பரத்தில் உள்ள பதவி மற்றும் கருத்திட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு , பதிவுத் தபாலில் செயலாளர் , போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு , " மகனெகும மகமெதுர ", இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை , கொஸ்வத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2026.02.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.

**06. விசேட கவனத்திற்கு**

- **தரப்பட்டுள்ள படிவத்தின்படி முறையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**
- **விண்ணப்பத்துடன் சான்றிதழ் பிரதிகளைச் சமர்ப்பித்த தகைமைகள் மட்டுமே தெரிவுக்காக கவனத்திற் கொள்ளப்படும்**

**07. ஏதேனும் விசாரணைக்கு தயவுசெய்து பின்வரும் இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்** 0112271048

**08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஊடகங்களில் வெளியிடப்பட்ட இந்த விளம்பரத்தின் மொழி சொற்றொடர்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு இருந்தால் , சிங்கள விளம்பரத்தில் உள்ள விடயங்களே மேலோங்குதல் வேண்டும்**

விண்ணப்ப மாதிரி - இணைப்பு

**செயலாளர்**
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு